செய்தி வெளியீடு எண் :896 நாள்: 03.06.2022

## செய்தி வெளியீடு

**இன்று (3.6.2022) சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வெலிங்டன் வளாகம், அரசு மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதியில் இன்று முதல் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைகளின் கீழ் தமிழகம் முழுவதும் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலப் பள்ளி / கல்லூரி விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணவ / மாணவியருக்குத் திருத்தம் செய்யப்பட்ட உணவுப் பட்டியலின்படி புதிய உணவு வழங்குவதற்கான தொடக்க விழா நடைபெற்றது.**

இன்று (03.06.2022) சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வெலிங்டன் வளாகத்தில் இயங்கி வரும் அரசு மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதியில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் தலைமையில் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருத்தம் செய்யப்பட்ட உணவுப் பட்டியலின்படி மாணாக்கர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைகளின் கீழ் 1354 கல்வி விடுதிகள் இயங்கி வருகின்றன. விடுதிகளில் 86,514 மாணவ/மாணவியர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். விடுதி மாணாக்கர்களுக்கு காலை/ மதியம்/ இரவு என 3 வேளைகளிலும் உணவு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வரும்

வாராந்திர உணவுப்பட்டியல் பல ஆண்டுகளாக மாற்றம் செய்யப்படாமல் இருந்தது. தற்போது, 18 ஆண்டுகளுக்குப் பின் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான இன்று (3.6.2022) முதல் இத்துறையின் கீழ் தமிழகம் முழுவதும் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலப் பள்ளி / கல்லூரி விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணவ / மாணவியருக்குத் திருத்தம் செய்யப்பட்ட உணவுப்பட்டியலின்படி புதிய உணவு வழங்கப்பட உள்ளது.

இத்திட்டத்தால் 86,514 மாணவ/மாணவியர்கள் பயனடைவர். மேலும், புதிய உணவுப் பட்டியலின்படி உணவு வழங்கப்பட உள்ளதால் விடுதிகளில் மாணாக்கர் சேர்க்கை அதிகரிக்கும். இதனால் மாணாக்கர்களின் கல்வி மற்றும் உடல் நலன் மேம்படும்.

**புதிய உணவு பட்டியல் விவரம்**

| கிழமை | காலை | மதியம் | இரவு |
|---|---|---|---|
| திங்கள் | சேமியா கிச்சடி, தக்காளி சட்னி (சாம்பார் சேர்த்துக்கொள்ளலாம்) | சாதம், சாம்பார்,இருவகை பொரியல், ரசம், மோர், முட்டை **(அல்லது)** சாதம், சாம்பார், 1 பொரியல், ரஸம், மோர், முட்டை மசாலா | சப்பாத்தி, குருமா |
| செவ்வாய் | பூரி, மசால் | காய்கறி பிரியாணி, காய்கறி குருமா, முட்டை | இடியாப்பம், குருமா **(அல்லது)** காய்கறி கூட்டு (Vegetable Stew) |
| புதன் | இட்லி, சாம்பார் , சட்னி | சாதம், ஆட்டிறைச்சி / கோழி குருமா **(அல்லது)** மட்டன் / சிக்கன் குழம்பு, பொரியல், மோர் | காய்கறி புலாவ், குருமா. (ரைத்தா சேர்த்துக்கொள்ளலாம்) |
| வியாழன் | இடியாப்பம், பட்டாணி குருமா **(அல்லது)** தேங்காய் பால். | தக்காளி சாதம் **(அல்லது)** லெமன் சாதம் **(அல்லது)** தயிர் சாதம், உருளை பொரியல், முட்டை | ஊத்தாப்பம், சட்னி, சாம்பார் |

| | | | |
|---|---|---|---|
| வெள்ளி | பொங்கல் **(அல்லது)** வரகு பொங்கல் **(அல்லது)** தினை அரிசி பொங்கல், கத்தரிக்காய் கொத்சு, வடை. | சாதம், காரக்குழம்பு , பொரியல் , ரசம், மோர், முட்டை. (பொரியலுக்கு பதிலாக ஒரு கூட்டு வகையை சேர்த்துக் கொள்ளலாம்) | கோதுமை தோசை, தக்காளி சட்னி |
| சனி | ரவா கிச்சடி, தேங்காய் சட்னி | புதினாசாதம் **(அல்லது)** காரட் சாதம் **(அல்லது)** கறிவேப்பிலை சாதம், அப்பளம், முட்டை (பருப்பு துவையல் சேர்த்துக்கொள்ளலாம்) | சாதம், சாம்பார், பொரியல், ரசம் |
| ஞாயிறு | தோசை **(அல்லது)** நவதானிய தோசை, சாம்பார், சட்னி | சாதம், முட்டை குருமா, ரசம், மோர் | தக்காளி சாதம் **(அல்லது)** சாம்பார் சாதம், வறுவல் |

இந்நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. ஆ.கார்த்திக், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு சிறப்புச் செயலாளர் திரு. சம்பத், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நல இயக்கக ஆணையர் திரு. அனில் மேஷ்ராம், இ.ஆ.ப., மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் நல இயக்கக ஆணையர் திரு. மா.மதிவாணன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in